# Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A) 'S

## Special message for the spiritual get together at Noorul Islam Masjid at Mathra on 23-24 March 2016

## கேரளா-மாத்திரா நூறுல் இஸ்லாம் மஸ்ஜித்தில் வைத்து நடைபெற்ற ஆன்மீக சங்கமத்தின் போது ஹஸ்ரத் கலீ:பத்துல்லாஹ் வழங்கிய பிரத்தேகமான செய்தி



**எனது பிரிய சகோதரீ சகோதரர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வா.வா**

கேரளாவை சார்ந்த எனது தோழர்களிடம் சில விஷயங்கள்க் கூறிக்கொள்ள முடிந்ததில் நான் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அல்லாஹ்வின் கருணையால், கேரளா ஜமா அத் ஆன் மீக கல்விக்காக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்திக்கொள்வதைப் பார்க்கும் பொழுது எனது மகிழ்சி இரட்டிப்பானது. கேரளாவில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவது, ''மஸீஹெ மௌ உளத்'' தினமாகிய மார்ச் 23-ஆம் தேதி முடிந்து பின்வரும் நாளிலாகும். அதனால் இந்த பிரத்தேகமான நாளைக் குறித்து சில விஷயங்கள் கூறிக்கொள்ள வேண்டியது எனது கடமையாகும்.

**கடந்த நூற்றாண்டில் மஹ்தியும் வாக்களிக்கப்பட்ட மஸீஹுமான ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹ்மது (அலை) அவர்கள்1889 மார்ச் மாதம் 23-ம் தேதி அன்று முதல் பை-அத் வாங்கினார். அந்த நாள் முதல் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமா அத் வளர்ச்சியின் பாதையை நோக்கி முன்னேற்றமடைந்துக் கொண்டிருந்தது. பலதரத்தில் பட்ட பிரட்ச்சனைகளும் துன்புறுத்தல்களும் எதிர்கொள்ள வேண்டியதாகயிருந்தும், அதன் முன்னேற்றத்திற்கு தடங்கல் ஏற்படுத்திட எவராலும் முடியவில்லை. ஆனால் காலம் சற்று முன்வந்தபொழுது அஹ்மதிகள் என உரிமைகோருகின்றவர்கள் தான் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் போதனைகளை எட்டி மிதிக்கின்றோர்களாக மாறிக்கொண்டனர். ஜமா அத்து அமைப்பு உருவாகியுள்ள உலகநாடுகளிலனைத்தும் இந்நிலை காணமுடியும். இந்த சூழ்நிலையில் இந்நூற்றாண்டில் அல்லாஹ் அவனது முஹைதீனாகவும் கலீ.்.பாவாகவும் என்னை எழுப்பிக்கொண்டான். அத்தோடு மற்று பல பதவிகளும் இந்த எளியவனுக்கு சூடடிக் கொண்டு ஹஸ்ரத் மஸீஹெ மௌஉளத் (அலை) மின் ஜமாத்திற்கும் ஹஸ்ரத் முஹமது நபி (ஸல்) வின் உம்மத்திற்கும் அருள்களை பொழிந்து கொண்டான். மானிட குலத்தை அனைத்தும் உண்மையான இஸ்லாமின் போதனைகளின்பால் அழைப்பதற்கு கடமைப்பட்ட மதசீர்திருத்தாளராக நான் அனுப்பப்பட்டிருக்கின்றேன்.**

அல்ஹம்துலில்லாஹ், கேரளா ஜமா அத், இக்காலகட்டத்தின் கலீ.்.பத்துல்லாஹ்வை ஏற்றுக்கொண்டோர்களாவார்கள். இந்த இருள் நிறைந்த காலகட்டத்தில் உண்மையின் தீபத்தை தெளித்துப்பிடிப்பதற்கும் அதை உயர்த்திப்பிடித்து உலகை முழுவதும் ஒளிமயமாக்கிடவும் விதிக்கப்பட்டவர்கள் ஆவீர்கள் நீங்கள் (அதாவது கேரளா ஜமாஅத்). **இந்த போர்களத்தில் நமது ஆயுதங்கள் நாம் உயர்த்திபிடித்திருக்கும் நம் கருத்துகளாகும். நமது தோக்கும், வாளும் நமது பிரார்த்தனைகளாகும். உன்னதமான கொள்கை மதிப்புகளும், நல்லொழுக்க தன்மைகளும் சிறப்பான குணங்களும் கொண்டு உலகத்தோடு நாம் சர்ச்சையில் ஈடுபட்டுக்கொள்ளும்பொழுது, இறைவனிடத்தில் மக்களை எட்டவைக்க செய்யும் ராஜபாதையான இஸ்லாமின் வெற்றிக்கொடியை உயர்த்திப்பிடித்திட நமக்கு முடிந்துவிடும்.**

**அல்லாஹ்வின் கருணையால் கேரளா ஜமாத்து அசாதாரணமான திறமைகளால் அருள்நிறைந்து திகழுகின்றது என எனக்கு புரிந்துக்கொள்ள முடிந்தது. அல்லாஹ்விலிருந்துள்ள இந்த வரப்பிரசாதத்தை நீங்கள் நன்கு பயன்படுத்திடுங்கள். அவ்வாறே செய்து கொண்டால் உங்களுக்கு மாபெரும் வெற்றியை அடைந்துவிடலாம். உங்களின் பிரியமான தாய்நாட்டில் ஒரு நல்லொழுக்க - ஆன்மீக மாற்றம் உருவாக்கிட அல்லாஹ்வின் அருளால் உங்களுக்கு முடிந்து விடட்டும்.**

என்றிருந்தாலும், ஒரு விஷயம் உங்களிடத்தில் குறிப்பாக கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நான் மேல்க் கூறிய விஷயங்களை நீங்கள் கடைப்பிடித்திட வேண்டும். ஆனால் அவ்வகை செயல்கள் செய்யும்பொழுது எல்கையினை மறந்து செயல்படக்கூடாது. ஏனைய மக்களிடத்தில் வைத்துக்கொள்ள வேண்டிய ஆதரவினையும் கவனத்தையும் தவிர்த்துக் கொள்ளக் கூடாது. ஜமாத்தின் சட்டங்களை அத்துமீறக்கூடாது. நாட்டின் சட்டத்திற்கு கட்டுப்பட்டுக்கொள்ள வேண்டும்.

கடமைகளை உணர்ந்து செயல்பட்டுக்கொள்ள வேண்டும். முதியோர்களை நேசித்துக்கொள்ள வேண்டும். கவனமாக அவர்களிடத்தில் செயல்பட்டுக்கொள்ள வேண்டும். உங்களின் தாய் தந்தையுடன் கருணையுடன் பருமாறிக்கொள்ள வேண்டுமென திருமறை கற்பிக்கின்றது. அந்த இறை நூல் கூறுகின்றது.

**"இன்னும் இரக்கம் கொண்டு பணிவு என்னும் இறக்கையை அவ்விருவருக்காகவும் நீர் தாழ்த்து வீராக. மேலும் என் இறைவனே! நான் சிறு பிள்ளையாக இருந்தபோது என்னை அவ்விருவரும் வளர்த்தது போல் நீயும் அவர்களிருவருக்கும் கிருபை செய்வாயாக! என்று கூறி பிரார்த்தீப்பீராக!"** (17-25)

அதைப்போன்று எப்பொழுதும் நினைவுகொள்ள வேண்டும். **அமீர் சாஹிப்புக்கு கட்டுப்பட்டு கொள்ள வேண்டும் என்று மட்டுமின்றி அன்னாரை ஆதரித்துக் கொள்ளவும் நேசித்துக்கொள்ளவும் வேண்டும். அன்னாரை முன் கடந்து செல்ல நீங்கள் வீண் ஆவேசம் காட்டாமல் இருங்கள்.** நமது நபி அரசன் ஹஸ்ரத் முஹமது (ஸல்) கூறிய விஷயத்தை நினைவு கொள்ளுங்கள்

**"அமீர் ஒரு கேடயமானவர். போர்வேளையில் கேடயத்தை முன்வைத்து செயல்படுங்கள். கேடயத்தை தாண்டி முன் சென்று அபாயத்திற்கு ஆளாக வேண்டாம். கேடயத்தை தவிர்த்துக் கொண்டு செல்பவன் நாசத்தை அழைத்துக் கொள்ளவே செய்கின்றான்"**

அல்லாஹ் உங்களோடு இருப்பானாக! அல்லாஹ்வின் வழியில் முயர்ச்சிப்பதற்கு ஆயத்தமாகிய இஸ்லாமின் கர்ம போராளிகளாக உங்களை அவன் மாற்றுவானாக. தீர்க்க நோக்கத்துடன் செயல்படுங்கள். தவறான விஷயங்களை தவிர்த்துக் கொள்ளுங்கள். நல் நடப்பு, வாழ்க்கையில் அமல்படுத்திடுங்கள்.

அல்லாஹ் அதன் பிரத்தேகமான அருள்களை உங்களின் இந்த ஆன்மீக சங்கமத்தில் இறக்குவானாக. அனுதினம் ஆன்மீக முன்னேற்றம் அடைந்திட அவன் கருணைக்காட்டுவானாக. எல்லா வகையிலும் தூய வழியில் பயணம் மேற்கொண்டிட உங்களுக்கு முடிந்திடட்டும். ஆமீன். சும்ம ஆமீன், யா ரப்பல் ஆலமீன்

**Issued by**

**Jamaat Ul sahih Al Islam Dawa Department**

**Tamil Nadu, India (Regd. No. A/693)**

**Web. www. jamaat-ul-sahih-al-islam.com**

**Translated by**

**Azim Ahmad**

**E-mail: azimahmad070@gmail.com**

**Cell: 9789180817, 9947181650**